2023 ஏப்ரல் 6]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தையும் நேரடியாக விற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. அப்படி ஏதேனும் நடவடிக்கை எடுத்திருந்தால், கண்டிப்பாக அதை ஆய்வு செய்து, நாமே கட்ட முடியும் என்றால் வீட்டு வசதி வாரியமே கட்டும். எது வீட்டு வசதி வாரியத்திற்கு இலாபகரமாக இருக்குமோ அந்தவகையிலே அந்தப் பணியை நாம் துவங்கலாம். கண்டிப்பாக, அதை ஆய்வு செய்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

114—

மின்மாற்றி

***22822—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 74–வது வார்டு, சேமாத்தம்மன் நியூ காலனி மூன்றாவது தெருவில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு எண் 74, சேமாத்தம்மன் நியூ காலனி, மூன்றாவது தெருவிற்கு, அதிகரித்து வரும் மின் தேவையினைக் கருத்தில்கொண்டு, கூடுதலாக புதிய 100 KVA மின்மாற்றி நிறுவப்பட்டு, 30–7–2022 அன்று முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டு, சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, சேமாத்தம்மன் நியூ காலனி, மூன்றாவது தெருவில் மின்மாற்றி அமைத்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், அமைக்கப்படுகின்ற மின்மாற்றி RMU என்று சொல்லக்கூடிய மின்மாற்றியாக இருந்தால் நன்றாக இருக்கும். காரணம், நவீன மின்மாற்றிகள் மூலம் 99 சதவிகித மின் துண்டிப்பு தவிர்க்கப்படுகிறது. மேலும், அதனைப் பராமரிப்பதில் சிரமம் இல்லை. காக்கைகளால் ஏற்படும் மின் துண்டிப்பும் தவிர்க்கப்படுகிறது. மேலும், மழைக் காலங்களில் சிரமமின்றி, மின் துண்டிப்பைச் சரிசெய்யக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, RMU என்று சொல்லக்கூடிய அந்த மின்மாற்றியை அமைத்துத் தர வேண்டும். என்னுடைய, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில், புளியந்தோப்பு மின்வாரிய அலுவலகத்தின் எல்லைக்குட்பட்ட தர்கா தெரு, பென்சனர் லேன், அலெக்சாண்டர் லேன் இரண்டாவது தெரு, கிரே நகர், 2–வது தெரு, தேசிய காலனி, ஐதர் கார்டன் 2–வது தெரு, Karnatic Mills Quarters, அதேபோன்று, ஏகாங்கிபுரம் 3–வது தெரு, ஏகாங்கிபுரம் 4–வது தெரு, Tank Bund Road ஆகியவற்றில் RMU என்று சொல்லக்கூடிய அந்த மின்மாற்றிகளை அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதியிலுள்ள எல்லா பெயர்களையும் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, கடந்த இரண்டு ஆண்டுகளில் 40,020 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அதில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் சட்டமன்றத் தொகுதியான திரு.வி.க. நகர் தொகுதியில் 25 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற பகுதிகளில் துறையின் சார்பாக ஆய்வு செய்து, தேவை ஏற்படின், புதிய RMU அமைப்பதற்கு துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் நிறைய இடங்களில் பழைய வடிவிலான மின்மாற்றிகள் இருக்கின்றன. அந்தப் பழைய மின்மாற்றியில் பழுது ஏற்படுகின்றபோது, அதைக் கண்டுபிடிப்பதற்கே சில மணி நேரங்கள் ஆகின்றன. அப்படியே பழுது கண்டுபிடிக்கப்பட்டாலும், அதைச் சரி செய்வதற்குப் பல மணி நேரம் ஆகின்ற சூழ்நிலையும் இருக்கின்றது. எனவே, அந்தப் பழைய வடிவிலான மின் மாற்றியை மாற்றிவிட்டு, புதிய வடிவிலான RMU என்ற நவீன மின்மாற்றியை அமைத்துத் தர வேண்டும். புளியந்தோப்பு மின்வாரிய அலுவலக எல்லைக்குள் உள்ள கோவிந்தன் ரோடு, அம்பேத்கர் காலேஜ், ஜெயின் டெம்பிள், திரு.வி.க. நகர், எம்.எஸ். முத்து நகர், தாஸ் நகர், நாச்சியார் அம்மாள் லேன், ராமசாமி தெரு, மன்னார்சாமி தெரு ஆகியவற்றில் இருக்கின்ற பழைய வடிவிலான மின்மாற்றிகளை மாற்றிவிட்டு, புதிய வடிவிலான மின்மாற்றிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று, இந்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் பகுதிகளில் புதிய RMU அமைப்பதற்கு துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். மாநகராட்சிப் பகுதிகளில் புதியதாகக் கட்டடம் கட்டும்போது ஒருசில பகுதிகளைச் சேர்த்து கட்டிவிட்டால், அதற்கு completion certificate வேண்டுமென்று கேட்கிறார்கள். EB connection கேட்கும்போது, கிடைப்பதில்லை. இதிலிருக்கும் சிரமத்தை மாற்றி, அந்தக் கட்டட உரிமையாளரின் சிரமத்தைக் குறைப்பதற்காக, மாநகராட்சியில் NOC அல்லது மாற்றாக ஏதாவது ஒரு நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்து மின்சார இணைப்பை வழங்க முடியுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மின் இணைப்புகள் வழங்குவதற்கு, மின்சார வாரியம் பல வழிமுறைகளை வைத்திருக்கின்றது. அந்த வழிமுறைகளுக்கேற்பதான் மின் இணைப்புகளை வழங்க முடியும். சிலநேரங்களில் விதிமுறைகளை மீறி மின் இணைப்பு கொடுக்கப்பட்டால், அருகாமையில் இருக்கக்கூடியவர்கள்கூட நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடிய ஒரு சூழல் ஏற்படுகின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியிருக்கிற பிரச்சினை, இரண்டு துறைகள் சம்பந்தப்பட்டது. எனக்கு முன்னால் இருக்கின்ற நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுடைய துறையையும் சேர்த்து, இரண்டு துறைகளைச் சார்ந்தது. இங்கிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் உள்ளிட்ட அனைவரும்

2023 ஏப்ரல் 6]

அந்தக் கோரிக்கையை ஏற்கெனவே முன்வைத்திருக்கிறார்கள். எனவே, இப்பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, இரண்டு துறைகளுடைய மாண்புமிகு மூத்த அமைச்சர்களோடு பேசி, அதற்கான தீர்வு காணப்படும். ஏற்கெனவே, அதுகுறித்து நகர்ப்புர வளர்ச்சித் துறை மூலமாக ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்குரிய பகுதிகளில் இருந்தாலும்கூட, மின் இணைப்புகள் வழங்கப்படலாம் என்று சுற்றறிக்கை அவர்கள்மூலம் அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அதைப்போன்று ஏதேனும் குறிப்பிட்டுச் சொன்னால், துறை அது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதியை மீறி கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்கிறார். கொஞ்சம்* extension *ஆகியிருக்கிறது. அதற்கு* exemption *கொடுத்து நீங்கள் மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுமாதிரி விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட கட்டடங்கள் மட்டுமல்ல, ஏற்கெனவே, எந்தவிதமான விதிகளுக்கும் உட்படாமல், தன்னிச்சையாக கட்டப்பட்ட கட்டடங்களுக்கும்கூட வரி வசூல் செய்ய முடியாமல் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, அனைத்து உறுப்பினர்களும், அனைத்து அமைச்சர்களும், சேர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசி, ஒரு முடிவு எடுக்க வேண்டும். அப்படி ஒரு முடிவு எடுத்து, நாங்கள் கேட்டோம்; 'இது போல் விதியை மீறி கட்டிவிட்டார்கள், அவர்களுக்கு* fine *போடுகிறோம்' என்றும், '*fine *போட்டுவிட்டு அவர்களை* regularization *செய்கிறோம்' என்றும் நீதிமன்றத்தில் கேட்டோம். அதற்கு நீதிமன்றத்தில் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், 'ஏன் இப்படி ஒரு சட்டம் வைத்திருக்கிறீர்கள்? அந்தச் சட்டத்தையே எடுத்து விடுங்களேன்' என்கின்றனர். 'ஒவ்வொன்றுக்கும்* exemption *கொடுக்கவேண்டுமென்றால், நீங்கள் அந்தச் சட்டத்தையே*

எடுத்து விடுங்கள்' என்று நீதிமன்றத்தில் சொல்கிறார்கள். எனவே, இது ஓர் இடியாப்பச் சிக்கலாக உள்ள பிரச்சினையாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றத்தின் மூலமாக தீர்வு பெற்று, ஒரு முடிவு எடுக்கப்படும்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.

திரு. ஒய். பிரகாஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒசூர் சட்டமன்றத் தொகுதியில், நெல்லூர் ஊராட்சி, சேவுகனபள்ளி ஊராட்சி, ஈச்சங்கூர் ஊராட்சி ஆகிய பகுதிகளில் மின்னழுத்தம் அதிகமாக இருக்கின்றது. அதிலும், குறிப்பாக நெல்லூர் ஊராட்சி, ஒசூர் மாநகராட்சியை ஒட்டியுள்ள காரணத்தினாலும், குடியிருப்புகள் அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினாலும், அங்கு ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மற்றும் பொது மக்களிடமிருந்து 80–க்கும் மேற்பட்ட கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. அந்தக் கோரிக்கைகள் அனைத்தும் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் பகுதியையும் சேர்த்து துறைக்கு அனுப்பி, தேவை ஏற்படின், இந்த ஆண்டு அறிவிப்பில் சேர்க்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2023 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. M. ராஜமுத்து, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

115—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம்

***6907—திரு. M. ராஜமுத்து:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மாவட்டம், ஆத்தூர் சுகாதார மாவட்டத்திற்குட்பட்ட பனமரத்துப்பட்டி, மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில், 1986 ஆம் ஆண்டு கட்டப்பட்ட புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம் ஒன்று பழுதடைந்து இருந்தது. அந்தக் கட்டடத்தின் பயன்பாட்டை அறிந்திருந்த காரணத்தினால், மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலைப் பெற்று, 2021–2022 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி, 15–வது நிதிக் குழுவின்மூலம் 60 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போது கூரை அளவில் அக்கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. வெகு விரைவில் அக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. M. ராஜமுத்து அவர்கள்.*